2008 ஏப்ரல் 9]

79—

சோயா பால்

***29941—திரு. பி. பலராமன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளி சத்துணவுக் கூடங்களில் மாணவர்களுக்கு 'சோயா பால்' வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பள்ளி சத்துணவுக் கூடங்களில் மாணவர்களுக்கு 'சோயா பால்' வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன்.*

திரு. பி. பலராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் குழந்தைகளுக்கு இரும்புச் சத்து தேவைப்படும் என்பதால், கொண்டைக் கடலை போன்ற சத்துள்ள உணவுகள் வழங்கப்பட்டன. அதேபோல், 'சோயா பால்' போன்ற எளிதில் ஜீரணம் ஆகக்கூடிய திரவ உணவுகள் வழங்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வருடம் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளையொட்டி இரண்டிலிருந்து 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் மற்றும் மாணவ, மாணவியர்க்கும் சத்துணவுடன் வாரம் 3 முட்டைகள், திங்கள், புதன், வியாழக்கிழமையும் . . .*

[2008 ஏப்ரல் 9

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: வேக வைத்த கருப்புக் கொண்டைக் கடலை 20 கிராம் செவ்வாய்க்கிழமையும், 20 கிராம் உருளைக்கிழங்கு வெள்ளிக்கிழமையும் வழங்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு பரிந்துரைத்தபடி ஒரு நாளைக்கு ஒரு பயனாளிக்கு 450 கலோரி சத்தும், 12 கிராம் புரோட்டீனும் போதுமானது. ஆனால், டாக்டர் கலைஞர் அரசு கூடுதலாக நாள் ஒன்றுக்கு 475 கலோரி சத்தும், 16 கிராம் புரதச் சத்தும் தருகிறது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல; மேலும், சோயாவைவிட முட்டையில்தான் அதிக அளவு புரதச் சத்தும், கொழுப்புச் சத்தும் உள்ளது. உணவுப் பொருட்களிலே முட்டையில்தான் புரதச் சத்து அதிகம் உள்ளது. கலப்படம் செய்ய முடியாத உணவு. அதனால்தான் டாக்டர்களுக்கு எல்லாம் டாக்டராக விளங்கும் நமது முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 3 முட்டைகளை வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்கள் என்பதைப் பெருமையோடு பேரவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன்.

திரு. பி. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமலும் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மனிதப் புனிதர் புரட்சித் தலைவரின் புனிதத் திட்டமான சத்துணவுத் திட்டத்திற்காக அப்போது கட்டப்பட்ட செங்கல் கட்டடங்கள் காற்று வசதிக்காக செங்கலுக்கு செங்கல் இடைவெளிவிட்டு கட்டப்பட்டன. தற்போது கான்கிரீட் தளச் சுவரில் இடைவெளி இல்லாமல் கட்டப்படுவதால், கோடைக் காலங்களில் குழந்தைகளுக்கு உடல் ஆரோக்கியக் குறைவு ஏற்படுகிறது. ஆகவே, தற்போது கட்டப்படுகின்ற கட்டடங்களுக்கு மின் வசதியும், மின் விசிறி போன்ற (மணியடிக்கப்பெற்றது) அனைத்து வசதிகளும் செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

2008 ஏப்ரல் 9]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமையல் அறைகள் இப்போது படிப்படியாக நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த 2 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 750 சமையல் அறைகளுக்கு எரிவாயு இணைப்புடன் Gas அடுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக ஏறத்தாழ 3 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கடந்த ஆட்சிக் காலத்தில் பணி நியமனத் தடைச் சட்டத்தை சத்துணவு அமைப்பாளர்கள், சமையலர்கள்மீதும் பயன்படுத்தி எந்த அளவுக்கு குழந்தைகள் கஷ்டப்பட்டார்கள் என்பதை நாடு அறியும். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

80—

கால்நடை மருத்துவமனை

***26793—திரு. கு. சின்னதுரை:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதி, நாவக்குறிச்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடந்த நிதியாண்டில் நம்முடைய தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் 40 கால்நடை மருந்தகங்களைப் புதிதாகத் தொடங்க ஆணையிட்டார்கள். அதன்படி அரசாணை எண் 136, நாள் 29-8-2007-ன்படி சேலம் மாவட்டத்தில் மட்டும் 8 கால்நடை மருந்தகங்கள் புதியதாகத் தொடங்கப்பட்டன. அதில் ஒன்று தலைவாசல் தொகுதி, நாவக்குறிச்சியிலும் புதிய கால்நடை மருந்தகம் தொடங்கப்பட்டு, கடந்த 11-1-2008 முதல் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS